Registered as a News paper
பக்கங்கள் - 08
விலை - ரூபா 07

மின்னியல், இலத்திரனியல்
உபகரணங்கள் பெறுவதற்கு OR
பழுதுபார்க்க, பாடல்கள், படங்கள், ஒலி, ஒளி
நாடா, இசை தட்டுக்கள் பெறுவதற்கு நாட
வேண்டிய இடம்
T.V.R. ELECTRONIC'S
NO 88/1
DOCTOR LANE
KALUWANCHIKUDI.
காட்சியறை
T.V.R SONY SHOW ROOM
பிரதான வீதி,
(மக்கள் வங்கி அருகாமை)
களுவாஞ்சிகுடி

# ஈழநாதம்
Eezhanatham
மட்டக்களப்பு பதிப்பு
மக்கள் நாளிதழ்

நாதம் 01 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 23 | 08.11.2004 | திங்கட்கிழமை | ஓசை 161

## தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதால் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம்

### மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

(எஸ். ரவீந்திரன்)

நாங்களாகவே ஆயுதம் ஏந்தவில்லை ஆயும் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம் இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து தமிழர்கள் உரிமைகள் மறுக்கப்பட்டன.

இவ்வாறு நேற்று களுவாஞ்சிகுடியில் வர்த்தகர்களுடனான சந்திப்பின் போது மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்தார்.

வர்த்தக சங்கத் தலைவர் கே. பரமானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது தொடர்ந்து உரையாற்றிய அரசியல் துறைப் பொறுப்பாளர் நாங்கள் ஆயுதப் பிரியர் அல்ல யுத்த மோகம் கொண்டவர்களும் அல்ல, தமிழர்களின் உரிமைகளை சிங்களப் பேரினவாத அரசுகள் கொடுக்காது மறுத்த காரணத்தினால் தான் நாங்கள் ஆயுதம் ஏந்தினோம்.

எமது தேசியத் தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் போராட்டத்தை தொடர்ந்தோம் இன்று சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டோம். ஆனால் வடகிழக்கில் எதுவிதமான

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மாவீரர் துயிலுமில்லங்கள் அழகுப்படுத்தப்படுகின்றன

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் துயிலுமில்லங்கள் தொடர்ந்தும் அழகுப்படுத்தப்படுகின்றன.

சனிக்கிழமை தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் பல்வேறு அமைப்புக்கள் சிரமதான பணியில் ஈடுபட்டன.

நாவிதன்வெளி அன்னமலை பாடசாலை, சது/றாணமடு இந்து மகா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் நீதி நிர்வாகத் துறையினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## கி.பல்கலைக்கழகத்தில் நூலக வாரம்


(தனஞ்ஷயன்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வாசிப்பு திறனை மேம்படுத்துவதற்காக வருடா வருடம் நடாத்தப்படும் நூலக வாரம் இன்று ஆரம்பித்து நாளையும், நாளை மறுதி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)







# காத்தான்குடியில் 25 வருட மத விவகாரம் முடிவுக்கு வந்தது!

## இருதரப்பும் இணக்கப்பாடு, பள்ளிவாயல்களில் அறிவிப்பு

(நமது நிருபர்)

**காத்தான்குடியில் கடந்த 25 வருடங்களாக நிலவி வந்த மார்க்கப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இருதரப்பினரும் நேற்று நடத்திய பேச்சுவார்த்தையையடுத்து இந்த இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.**

காத்தான்குடியில் ஜம்மியத்துல் உலமாசபை பிரதிநிதிகளுக்கும், அகில இலங்கை மெய்ஞான பேரவைத் தலைவர் ரவூப் மௌலவி உட்பட ஐவர் கொண்ட குழுவினருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களில் இணக்கம் ஏற்பட்டதையடுத்து சுமுக நிலைக்கு வந்தது.

இந்த சந்திப்பில் எட்டப்பட்ட தீர்மானங்கள் பள்ளிவாயல்களில் அறிவிக்கப்பட்டன.

நேற்று முதல் ரவூப் மௌலவி மற்றும் அவரது குழுவினரை இஸ்லாமிய சகோதரர்களாக ஏற்றுக் கொள்ளுமாறு ஜம்மியத்துல்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கிளிநொச்சி சந்திப்பு நவம்பர் 16வரை ஒத்திவைப்பு!

(நமது நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நாளை கிளிநொச்சியில் நடைபெறவிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பு எதிர்வரும் 16ம்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## அம்பாறை மாவட்டத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ சுகாதார சேவையினர் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றனர்.

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக வயிற்றோட்டம் மக்களுக்கு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சுகாதார சேவையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

தற்போது பெய்யும் மழையினால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் பாம்புக்கடி, நாய்கடி அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

## 650 பாடசாலைகளில் போசாக்கு உணவுத் திட்டம்

(எஸ்.எஸ்.குமார்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த 650 பாடசாலைகளுக்கு போசாக்கு உணவுத் திட்டம் நடைமுறைப்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஆரையம்பதியில் அதிரடிப்படை அனுமதி சீட்டு விற்பனை

### மக்கள் அச்சுறுத்தால் வாங்கும் நிலை

(நமது நிருபர்)

ஆரையம்பதியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் நேற்று சோதனை நடவடிக்கைகளை மேற் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆரையம்பதி காத்தான்குடி எல்லையில் வைத்து குறிப்பாக மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தோர் சோதனைக்குள்ளாகினர்.

இதேவேளை ஆரையம்பதி பகுதியில் இசை நிகழ்ச்சி ஒன்றின் அனுமதி சீட்டுக்களை படையினர் வலுகட்டாயமாக பொது மக்களிடம் விற்பனை செய்வதாக பொது மக்கள் விசனம் தெரிவித்தனர்.

எதிர்வரும் 16ம் திகதி தொடக்கம் 19ம் திகதிவரை இரத்தினபுரியில் நடைபெறும் இசை நிகழ்ச்சிக்கான அனுமதிச்சீட்டுகளே தற்போது விநியோகிக்கப்படுகின்றன.

சிங்களத்தில் குறிப்பிட

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இன்றைய நாளில்

### தகவற்துளி

வித்துவசிரோன்மணி சி. கணேசையர் நினைவு நாள் (01.04.1878-18.11.1958)

வெற்றிலைக்கேணியில் தரையிறக்கும் கடற்கலம் மீது கரும்புலித் தாக்குதல் நிகழ்த்திய நாள் (1994)

# செய்தித் துளிகள்

## இப்தார் நிகழ்ச்சி

(முபா)

கடந்த வியாழக்கிழமை கல்முனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இப்தார் எனும் நோம்பு திறக்கும் நிகழ்வு ஒன்று இடம் பெற்றது. சகல மதத்தினரும் கலந்து அதனைச் சிறப்பித்தனர்.

மௌலவி சற் நதீர் அவர்களின் மார்க்க உபந்தியா சமும் இடம் பெற்ற இந் நிகழ்வில் மார்க்கட் வீதியில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்றது.

## சைவ சமய அறிவுப் போட்டி

(நமது நிருபர்)

இலங்கை இந்து இளைஞர் பேரவையும், மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகமும் இணைந்து நவராத்திரி தினத்தை முன்னிட்டு மட்- மகாஜனக் கல்லூரியில் கடந்த 30.10.2004 சைவ சமய அறிவுப் போட்டியினை மட்டக்களப்பு கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சுவாமி. அஜராத்மானந்தா ஜீ மகாராஜ் அவர்களால் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளரும் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைவருமாகிய திரு. எம்.பவளகாந்தன் அவர்கள் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் சைவ சமய ஆசிரிய ஆலோசகர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கவிதை நூல் அறிமுக விழா

(நமது நிருபர்)

அறிவிப்பாளர் நாகபூசணி கருப்பையாவின் நெற்றிக்கண் கவிதைநூல் அறிமுக விழா அண்மையில் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் கவிஞர் எம்.எம்.விஜிலீ நூலாய்வுரையினை நிகழ்த்தினார்.

மற்றும் விரிவுரையாளர் மௌலவி எம்.எல்.எம். ஜலால்தீன், சமாதான சஞ்சிகையில் ஆசிரியர் கலாபூசணம் மருதூர் வாணர் கவிஞர் எம். எச்.ஏ.கரீம் மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## இல்லத்தில் பிள்ளைகளைச் சேர்த்தல்

(நமது நிருபர்)

களுவாஞ்சிகுடி சக்தி இல்லத்தில் பெண் பிள்ளைகள் தற்போது சேர்க்கப்படுகின்றனர்.

இலங்கையில் எவ்விடத்திலாவது தாய் தந்தை இருவரையும் இழந்து பராமரிப்பு அற்றநிலையில் கல்வி உட்பட அடிப்படை வசதிகளுக்கு கஷ்ரப்படும் 6 வயது தொடக்கம் 12 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் பாதுகாவலர்கள் தலைவர், செயலாளர் சக்தி இல்லம், களுவாஞ்சிகுடி, மட்டக்களப்பு என்னும் முகவரியிலோ கிராமசேவகர், பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தலுடன் வருகை தருமாறு அழைக்கின்றோம்.

## பாராட்டு வைபவம்

(நமது நிருபர்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அண்மையில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கூடுதலான புள்ளி பெற்ற மாணவன் மு.அ.அம்சாருக்கு பாராட்டு விழாவொன்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எஸ்.எல்.ஏ. றகீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேற்படி மாணவனுக்கு நூல்கள் மற்றும் பாராட்டுக்கள் என்பன வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் கவிஞர் றகுமான் ஏ.ஜப்பார் உதவி அதிபர் ஏ.ஆர்.ஏ.றசூல் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கைதி சிங்கராசாவை விடுதலை செய்யுமாறு சர்வதேச மன்னிப்பு சபை வேண்டுகோள்

(நமது நிருபர்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியான நல்லரட்ணம் சிங்கராசாவை விடுதலை செய்யுமாறு அனைத்துலக மன்னிப்புச் சபை சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த இந்த தண்டனைக் கைதி 1993ஆம் ஆண்டு ஆடி மாதம் 16ஆம் திகதி மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். விடுதலைப்புலிகள் அமைப்பில் அங்கம்பெற்று ஆயுதப் பயிற்சி பெற்றது.

அரந்தலாவையில் சிறிலங்கா இராணுவத்தினரைக் கொலை செய்தது. சட்ட விரோதமான முறையில் 4 இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் மேற்கொண்டது.

ஆகிய குற்றச்சாட்டுகள் இவர்மீது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. கொழும்பு மேல் நீதிமன்றமொன்று இவ்வழக்கை விசாரித்து இவருக்கு 50 வருட சிறைத் தண்டனை விதித்தபோதிலும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன் முறையீட்டையடுத்து தண்டனைக் காலம் 35 வருடங்களாக குறைக்கப்பட்டது.

இத்தீர்ப்பு தொடர்பாக மனித உரிமை அமைப்புகள் அனைத்துலக மன்னிப்புச்சபைக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிற்கும் புகார் தெரிவித்திருந்தன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு இவரது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதால் இவர் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது மீண்டும் விசாரணை நடைபெற வேண்டும். அத்துடன் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் சிபார்சு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


# இந்தியமீனவர் அத்துமீறலை எதிர்த்து பேசாலை மீனவர் வீதி மறியல் போர்

(நமது நிருபர்)

தலைமன்னார் கடற்பரப்பில் ஆயிரக்கணக்கான இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருப்பதை எதிர்த்து பேசாலையில் நேற்றுமுன்தினம் முதல் மூவாயிரத்துக்கு மேற்பட்ட தலைமன்னார் மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பேசாலை வீதியில் தமது படகுகளையும், இழுவைப் படகுகளையும் கவிழ்த்து வைத்து இப்போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக தலைமன்னார் பொலிசார் தெரிவித்தனர். பேசாலையிலிருந்து இரண்டு கிலோமீற்றர் கடல் மைல் தொலைவில் சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்ட தலைமன்னார் மீனவர்கள் மீன்பிடிக்க முடியாத நிலையில் கரை திரும்பி இவ்வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவுகின்றது. பாதையில் இரண்டு கிலோமீற்றர் வரை தமது படகுகளையும், இழுவைப் படகுகளையும் கவிழ்த்து வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தலைமன்னார் செய்திகள் தெரிவிக்கின்றன. சம்பவத்தை கேள்வியுற்ற உயர் பொலிஸ் அதிகாரிகளும், கடற்படையினரும் பேசாலைக்குச் சென்று மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதை நிறுத்த நடவடிக்கை எடுக்கும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லையென்று மீனவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்



கொம்மாதுறை விபுலானந்தா அறநெறிப் பாடசாலையின் நவராத்திரி விழாவும், சீருடை வழங்கலும் அண்மையில் நடைபெற்றபோது பிரதம அதிதியான சுவாமி தந்திரதேவா இலவச அப்பியாசக் கொப்பிகளை கையளிப்பதையும், தலைவர் த.சேனாதிராசா அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படமும் தகவலும்:- விரி. சகாதேவராஜா)

# ரவூப் மௌலவியின் உறவினர் வீட்டுக்கு குண்டு வீச்சு!

## -சந்தேகத்தில் இளைஞர் கைது-

(நமது நிருபர்)

மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் இடம் பெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவம் தொடர்பாக ஜாமி யத்துல் உலமா சபை மதப்பிரிவைச் சார்ந்த ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவையின் தலைவர் ரவூப் மௌலவியின் உறவினரான எம்.சாஜஹான் மௌலவியின் வீட்டின் மீது இக் கைக்குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மொகமட் ஹுசைன் (வயது 27) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு மேலதிக நீதவான் எம். எச்.எம். அஜ்மீர் முன்னிலையில் இவர் ஆஜர்படுத்தப்பட்டார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அடையாள அணி வகுப்பிற்கு உத்தரவிட்ட நீதிபதி, அதுவரை விளக்கமறியலில் வைக்குமாறும் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் பாடசாலை ஒன்று அமைச்சரின் நடவடிக்கையால் சுடுகாடாகின்றது

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசின் சட்டம், சமாதானம், மக்கள் பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் ஜயரத்ன ஹேரத் தமிழ்ப் பாடசாலையொன்றை சுடுகாடாக்கி சாதனையொன்றை குருணாகலையில் நடாத்தியுள்ளார்.

குருணாகல் இந்து தமிழ் மகா வித்தியாலயத்தின் அருகில் அமைந்துள்ள விகாரையின் பிரதம குரு அண்மையில் காலமானார். அவரின் இறுதிக் கிரியைகளை பிரதியமைச்சர் அப்பாடசாலையின் தற்காலிக அதிபரும். அரச ஆதரவாளருமான அதிபரின் துணையுடன் பாடசாலை மைதானத்தில் தமிழர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் பலவந்தமாக நடாத்தியுள்ளார்.

இந்தப் பாடசாலையின் வளவினுள் விநாயகர் ஆலயமொன்றும் அமைந்துள்ளது. இந்த விநாயகர் ஆலயத்தின் முன் தேரரின் இறுதிக் கிரியைகளை நடாத்தி சைவ சமயத்திற்கு பிரதியமைச்சரும், தற்காலிக அதிபரும் இழுக்கை ஏற்படுத் தியுள்ளனர்.

அது மட்டுமல்லாமல் குருணாகல் சைவ மகாசபைத் தலைவரான க.கந்தசாமி, தேரரின் இறுதிக் கிரியைகளை நடாத்த பணத்தைதான் தருவதாகவும், அதை வேறு இடத்தில் நடாத்தும் படியும், விநாயகர் ஆலயம் முன்பாக ஈமக்கிரியைகள் நடாத்துவது முறையல்ல எனத் தெரிவித்தும், பிரதியமைச்சரின் ஆதரவாளர்கள் கோயிலை துணியால் மூடியபின் ஈமக்கிரியைகளை நடாத்தியுள்ளனர்.

இந்து கலாச்சார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இதை உடனடியாக அறிவித்தும், அவராலும் இதை தடுத்து நிறுத்த முடியாமல் போனதாக சைவ மகா சபைத் தலைவர் க.கந்தசாமி தெரிவித்தார். தற்போதும் வித்தியாலய மைதானத்தில இறந்த தேரரின் சாம்பல் காணப்படுகின்றது.

# மட்-அனுமார் கோயில் சந்தியில் வீடு ஒன்றின் மீது கைக்குண்டு வீச்சு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு நகரப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது நேற்று முன் தினம் இரவு 7.00 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிங்கள வாடியிலுள்ள அனுமார் கோவிலடிச் சந்தியிலுள்ள காலஞ்சென்ற ஆசிரியர் வெற்றிவேல் செல்வராஜா என்பவரின் வீட்டின் மீதே இந்த கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. வீட்டிற்கு முன்பாக இது விழுந்து வெடித்துள்ளதால் வீட்டின் முன் பக்கம் சேதமடைந்துள்ளது. வீட்டில் ஆசிரியரின் மனைவியும் மருமக்களும் அந்நேரம் இருந்துள்ளார்கள்.

இத்தாக்குதல் சம்பவத்திற்கான காரணம் தெரிய வில்லையென மட்டக்களப்பு பொலிசார் இதுபற்றி தெரிவித்தனர்.

# வெளிவிவகார பிரதியமைச்சர் தர்மேந்திரா குடும்பத்தை சந்தித்தார்

(நமது நிருபர்)

ஈராக்கில் முஸ்லிம் தீவிரவாதிகளினால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினத்தின் குடும்பத்தினரை நேற்று முன்தினம் வெளிவிவகார பிரதியமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார்.

இவரது விடுதலைக்காக இராஜதந்திர மட்டத்திலும் ஈராக்கிய மத தலைவர்கள் மட்டத்திலும் வெளிவிவகார அமைச்சு மேற் கொண்டு வருகின்ற முயற்சிகள் குறித்து அமைசசர் எடுத்துக் கூறினார்.

இச்சந்திப்பில் வெளி விவகார அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.







மாவீரர் தினத்தை முன்னிட்டு புதுமண்டபத்தடி மாவீரர் துயிலுமில்லத்தில் நாவிதன்வெளி , அன்னமலை மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

(படமும் தகவலும்:- ஜெயா)

## சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் போது முஸ்லிம்களின் எதிர்பார்ப்புக்கள் கவனிக்கப்பட வேண்டும்.

## -மெஸ்றோ நிறுவன அறிக்கை.-

(மருதமுனை நிருபர்)

**சமாதானப் பேச்சு வார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் இனப் பிரச்சினையுடனும் சமாதான முயற்சிகளுடனும் சம்மந்தப்பட்ட சகல அரசியல் சக்திகளும் முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்புகளை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.**

இவ்வாறு தெரிவித்து மெஸ்றோ நிறுவனம் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளது.

மெஸ்றோவின் சார்பில் அம்பாறை மாவட்டத் தலைவர் யூ. எல்.எம்.ஆகிர், செயலாளர், ஏ.எல். எம்.றிபாஸ் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரும், சமாதான முயற்சிகளை உடன் ஆரம்பிக்கப் போவதாகவும், தாம் தயாரித்துள்ள யோசனைகளை புலிகள் இயக்கத்திற்கு அனுப்பப்போவதாகவும் தெரிவித்துள்ளனர். இத்தகைய அறிவிப்புக்களில் முஸ்லிம்கள் தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

டோக்கியோ நிதி இலங்கைக்குக் கிடைக்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் பேச்சுக்கள் இடம்பெற வேண்டுமென கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வேலையற்ற மீனவர் சமூக இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்பு!

(பாண்டிருப்பு நிருபர்)

நாட்டில் வேலையற்ற மீனவர் சமூகத்தில் உள்ள 5000 இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் கடற்றொழில், நீரியல் வள அமைச்சின் திட்டத்திற்கமைய 1000 நடமாடும் மீன் விற்பனை நிலையங்களையும், 500 நிரந்தர மீன் விற்பனை நிலையங்களையும், கடற்றொழில் கூட்டுத்தாபனம் செயற்படுத்தவுள்ளது. கடற்றொழில் அமைச்சர் சந்திரசேன விஜயசிங்கவின் ஆலோசனைக்கமையவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத் திட்டம் கடற்றொழில் கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டு 40 வருடங்கள் பூர் த்தியாவதை முன்னிட்டு வாழ்க் கைச் செலவைக் கட்டுப்படுத்தி கு றைந்த விலையில் மீனை பாவனை யாளர்களுக்கு வழங்கும் அடிப்படையினைக் கொண்டதாகும்.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் 600,000 ரூபா செலவில் குளிர்சாதன உபகரணங்களைக் கொண்ட 1000 நடமாடும் தள்ளு வண்டிகள் மீன்களை இடத்துக்கு இடம் கொண்டு செல்வதற்காக வழங்கப்படும்.

இதற்கென ஆறுகோடி ரூபாவை கடற்றொழில் அமைச்சு செலவிடுவதுடன் சுயதொழிலுக்கென இளைஞர்களுக்கு நிதியுதவிகள் வங்கிகள் மூலம் பெற்றுக் கொடுக்கப் படும் என கடற்றொழில் கூட்டுத் தாபன தலைவர் என்.பி.றெவில் தெரிவித்தார்.

## அடைமழையினால் பெரும் போக நெற்செய்கை பாதிப்பு

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வாரங்களாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழை காரணமாக பெரும்போக நெற் செய்கை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதி கூடிய விலைக்கு விதை நெல்லினை கொள்வனவு செய்து பெரும்போக நெற் செய்கையில் ஈடுபட்ட வேளை தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையினால் நெற் செய்கை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இம் முறை மழை காரணமாக மாவட்டத்தின் தாழ்ந்த பிரதேசங்களான ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி, களுதாவளை, கொக்கட்டிச்சோலை, வவுணதீவு, கன்னன்குடா, கரையாக்கன்தீவு, மண்டபத்தடி, கொத்தியாபுலை, சேற்றுக்குடா, புதுநகர் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தற்போது நீர் வடிந்து வருகின்றது. பொதுமக்கள் தங்கள் பிரயாணங்களை மேற்கொள்கின்றனர்.

## கல்முனையில் கை விடப்பட்ட வாடி வீட்டுப் பிரதேச தபாலகக் கட்டடம்

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வாடி வீட்டுப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப் பட்ட தபால் அலுவல்க கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடையாத நிலையில் அரைகுறையாக கை விடப்பட்டுள்ளது. இந்நிலையில் இக் கட்டடம் சிலரால் துர்நடத்தைகள் பலவற்றுக்கு பயன்படுத்தப்படுவதாகவும், இக் கட்டடத்தை முழுமையாக பூர்த்தி செய்து பொதுமக்களின் தபால் சேவைக்கு விட நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கல்முனை தபால் அலுவலகம் அதி விசேட தரத்தினையுடைய ஒரு நிலையமாகும். இத் தபால் அலுவலகம் 13 உப தபால் அலுவலகங்களைக் கொண்டு நகரின் பிரதான நிலையமாக இயங்கி வருகின்றது. இருந்தும் தற்போது கல்முனை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இதனால் இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் போதிய இட வசதியின்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்தோடு பொது மக்களுக்குத் தேவையான மின்னஞ்சல், தொலைத் தொடர்பு, தொலைநகல், கணனி போன்ற தொடர்பாடல் வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதற்குக் கூட இதற்கென தனியான கட்டடங்களும் இன்மையால் அலுவலகத்திற்கு வரும் மக்களும் பலவேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சைவப் புலவர் வடிவேலின் மறைவையிட்டு அஞ்சலி செய்தி

(நமது நிருபர்)

பண்டிதர் வடிவேல் ஐயாவின் மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்தேன். அவர் என்னுடைய முதல் ஆசிரியர் நான் அவருக்கு முதல் மாணவன். களுதாவளை இ.கி.சங்கப் பாடசாலை ஆரம்பித்த பொழுது 1943ம் ஆண்டு முதல் நியமனம் பெற்றார். நான் இப்பாடசாலையில் முதல் மாணவனாகச் சேர்ந்தேன்.

அன்று தொட்டு இன்று வரை எனது குருவாகவேயிருந்து வந்தார்கள். அவர் தமிழுக்கும், சைவத்திற்கும் அரும் சேவை புரிந்துள்ளார்.

ஞான சிரோன்மணி பண்டிதர் இ.வடிவேல் அவர்களைப் பற்றி ''கிழக்கில் உதிர்த்த ஞானமலர்'' என்ற மலர் திருகோணமலையிலுள்ள ஐந்து பழம்பெரும் தேவஸ்தானங்களால் வெளியிடப்பட்டது. இந்த மலர் ஒன்றே அவர் புகழ் கூறப் போதுமானது.

இவ்வேளையில் அவரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். எனவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்குடா கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

(நமது நிருபர்)

கல்குடா கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் யு.எல்.எம்.ஜெயினுதீன் தெரிவித்தார். இந்த வலயத்தில் தற்போது 406 ஆசிரியர் வெற்றிடம் உள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார் இந்த வருடம் கல்விக் கல்லூரியில் இருந்து வெளியேறிய 53 ஆசிரி யர்கள் கல்குடா வலயத்தில் நிய மனம் பெற்ற போதும் தொடந்தும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வரு வதாகவும் ஆரம்ப நெறி ஆங்கில மொழி கற்பிக்கும் ஆசிரியர் வெற் றிடங்கள் அதிகம் காணப்படுவதாக வும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மீள் குடியேறிய மக்களுக்கு அடிப்படை வசதியில்லை

(எம்.யுவராஜ்)

வாகரைப் பிரதேச கட்டு முறிவுக் கிராமத்தில் மீள் குடியேறிய மக்களுக்கு இதுவரை எதவித அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப் படவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த கால வன்செயலின் போது தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து தற்போதைய சமாதான காலத்தில் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறிய மக்களுக்கு எதுவித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்காத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். தற்போது இக்கிராமத்தில் 400 குடும்பங்கள் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச சிறுவர் முதியோர் தின வார விழா

(செங்கலடி நிருபர்)

சர்வதேச சிறுவர் முதியோர் தின வார விழா இன்று 8ம் திகதி ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தில் காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலாளர் எஸ்.கிரிதரன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் வழமை போல முதியோர்களுக்கான அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படும்.

இந் நிகழ்வில் மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த முதியோர்கள் மற்றும் அரச அதிகாரிகள், பொது மக்கள் என பலர் கலந்து கொள்கின்றனர். ஏறாவூர் பற்று சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.கார்த்திகேசு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

## பாராளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி சிங்கப்பூர் பயணம்

(செங்கலடி நிருபர்)

சிங்கப்பூரில் நாளை முதல் 10ம் திகதி வரை நடைபெறவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பிராந்திய பட்டறையில் கலந்து கொள்வதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி நேற்று காலை 7.00 மணியளவில் கொழும்பிலிருந்து சிங்கப்பூர் பயணமானார் இவருடன் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் சென்றுள்ளனர். சிங்கப்பூர் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள இப்பட்டறையில் பங்காளதேஷ், இந்தியா, இலங்கை, மலேசியா, மாலைதீவு, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து மொத்தம் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

## செங்கலடி மத்திய கல்லூரி ஒலிபெருக்கி யுனிற் மாயம்!

(செங்கலடி நிருபர்)

செங்கலடி மத்திய கல்லூரியின் மேல் மாடியில் பொருத்தப் பட்டிருந்த பாடசாலைக்குச் சொந்தமான ஒலிபெருக்கியின் இரு யூனிற் இயந்திரங்களும் இனம் தெரியாதவர்களினால் களவாடப்பட்டுள்ளதாகவும், இதன் பெறுமதி ரூபா 6000 என்றும் இப்பாடசாலையின் நூலகத்தின் மேசை லாச்சிக்குள் வைக்கப்பட்டிருந்த ரூபா 2300 ரொக்கப் பணமும் யன்னல் கம்பியை வெட்டி அதன் வழியினால் திருடன் உட் சென்று அப் பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கல்லூரியின் அதிபர் க.சிறிதரன் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். ஏறாவூர் பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

# சிறந்த விளைச்சலைப் பெற




**விவசாயிகள் அனைவரும் புதிய நெல் வர்க்கத்தை தெரிவு செய்வதாயின் விவசாயத் திணைக்களத்தால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளை உள்ளடக்கிய நெல்லினங்களையே தெரிவு செய்ய வேண்டும். இவ்வாறு அத்தாட்சிப்படுத்திய விதை இனங்களை செய்கை பண்ணும் போது விவசாயிகள் எதிர்பார்க்கும் விளைச்சலை அதிகரிக்கலாம் என்பது விவசாய ஆய்வு நிலையங்களின் கணிப்பீடாகும்.**

# விவசாயத் திணைக்களத்தால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளை தேர்ந்தெடுக்கவும்

ஒரு புதிய நெல் வர்க்கம் ஒன்றைத் தெரிவு செய்யும்போது விவசாயத் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட விதைகளையே தெரிவு செய்ய வேண்டும். இதனடிப்படையில் சிபாரிசு செய்யப்பட்ட நெல்வர்க்க விதைகளின் பிறப்புரிமையியல், தூய தன்மையும், வேறு இயல்புகளும் பாதுகாப்பாக விவசாயிகளைச் சென்றடைவது மிக முக்கியமாகும். இதற்கு விவசாயத் திணைக்களத்தால் விசேட விதை உற்பத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

### இன விருத்தியாளர் விதை:-

விதை உற்பத்தித் திட்டத்தின் முதற்படி இனவிருத்தியாளர் விதை உற்பத்தியாகும். ஆராய்ச்சி நிலைய பணிப்யாளர்களின் விசேட கண்காணிப்பின் கீழ் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வாறு மிகக் குறைந்தளவு விதையே உற்பத்தி செய்யப்படுகின்றது. புதிய நெல் வர்க்கங்களை உற்பத்தி செய்யும் போது ஒரு முறை மாத்திரமே இனக்கலப்பு செய்யப்படுகின்றது. இனவிருத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், வர்க்கத்தின் இயல்புகளைத் தெளிவாகக் காட்டும் நெற்கதிரிலுள்ள விதை நெல்லைக் கொண்டு விசேட பயிர்ச் செய்கையின் கீழ் விதை உற்பத்தி செய்யப்படுகின்றது.

### அடிப்படை விதை:-

இன விருத்தியாளர், விவசாயத் திணைக்களப் பண்ணைகளில், செய்கை பண்ணி அடுத்த பரம்பரை உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனை இரண்டாவது பரம்பரை அடிப்படை விதை எனவும் அழைப்பர்.

இறுதியாக விவசாயிகள் செய்கை பண்ணுவதற்கென வழங்கப்படுவது அத்தாட்சிப் படுத்திய விதை நெல்லாகும். இது விதை நெல்களை இனப்பெருக்கம் செய்யும் ஒரு நடவடிக்கையாகும். இது ஒவ்வொரு போகத்திலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது.

### விதை அத்தாட்சிப்படுத்தல்:-

மேற்குறிப்பிட்ட விதை உற்பத்தி, விதை இனப்பெருக்கத் திட்டத்தில் ஒவ்வொரு பரம்பரையிலும் உற்பத்தி செய்யப்படும் விதையின் பிறப்புரிமையியல் தூய்மை, ஏனைய இயல்புகள் தொடர்பாக அவற்றை அத்தாட்சிப்படுத்தல் மூலம் சிறந்த, உயர்தரமான விதைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக விசேட திட்டமொன்று விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தற் சேவையின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதற்கு கண்ணொறுவையில் அமைந்துள்ள விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் தலைமைக் காரியாலயத்தினால் மேற்பார்வை செய்யப்படும். பல பிரதேசக் கமநல காரியாலயங்கள், இலங்கை எங்கும் விதை உற்பத்தியில் பரவலாக ஈடுபட்டு வரும் பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ளன.

விதை அத்தாட்சிப்படுத்தும் நடைமுறையில் வயற்பரிசோதனை, விதைப் பரிசோதனை ஆகியவற்றிற்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. அதாவது விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையின் வெளிக்களப் பரிசோதகரினால் அத்தாட்சிப்படுத்துவதற்கு பதிவு செய்யப்பட்ட சகல வயல்களின் பிறப்புரிமையியல் தூய்மை உட்பட அனைத்து இயல்புகளும் வயற்பரிசோதனை மூலம் உறுதி செய்யப்படும். எந்தவொரு வர்க்கத்தினதும் பிறப்புரிமையியல் தூய்மையை வயற் பரிசோதனை மூலமே பரிசோதிக்க முடியும். இதன் பின்பு இவ்வாயலில் அறுவடை அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளின் வகுப்பை இலகுவாக அறிந்து கொள்வதற்காக வித்தியாசமான நிறத்தைக் கொண்ட பெயர்ச்சுட்டிகள் (லேபிள்) பயன்படுத்தப்படுகின்றன.

# சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்கள் சில உபயோகமான தகவல்கள்

| வர்க்கம் | சராசரி விளைச்சல் மெ.தொ/ஹெக்.புசல்/ஏக் | விசேட இயல்புகள் |
|---|---|---|
| பி.ஜி-300 | 5-6 100- 120 | கபில நிறத் தத்திகளின் தாக்கத்தை ஓரளவு தாங்கி வளரும் எரிவந்தம், பக்ரீரியா,இலை வெளிறல், ஆகியவற்றை நன்குதாங்கி வளரும்.குறைந்த உரப் பசளை மட்டத்திலும் சராசரி விளைச்சலைப் பெறமுடியும். |
| பி.டபிள்யு272-6-பீ | 2.5 50 | எரிவந்தத்தைத் தாங்கி வளரும், இரும்பு நச்சுத் தன்மையையும், பனிப் பூச்சிகளின் தாக்கத்தையும் ஓரளவு தாங்கி வளரும்.''பொக்'' மண்ணிற்கு மிகவும் உகந்தது. நெல் உமியில் விசேட கபில நிறம் காணப்படும். |
| பி.டபிள்யூ- 302 | 5 100 | எரிவந்தம், பனிப்பூச்சிகள் ஆகியவற்றின் தாக்கத்தை நன்கு தாங்கி உவர்த்தரை, அமில மண் ஆகியவற்றை ஓரளவு சகித்து வளரும். நெல் உமியில் விசேட கபிலப் புள்ளிகளைக் காணமுடியும் |
| ஏ.ரி.303 | 5-6 100- 120 | எரிவந்தத்தைத் தாங்கி வளரும். |
| பி.ஜி.304 | 6 100- 120 | நெல் கொப்புள ஈ கபில நிறத்தத்திகள், பச்சை நிறத்தத்திகள் ஆகியவற்றின் தாக்கத்தையும், எரிபந்தம், பக்றீரியா, இலை வெளிறல் ஆகியவற்றை எதிர்த்தும் வளரும் இளம் பருவத்தில் மிக வீரியமாக வளரும். |
| பி.ஜி-94-1 | 7.5 150 | உரப்பசளைக்கு மிக தூண்டற் பேறுடையது. நீண்ட மணிகள். |
| பி.ஜி-350 | 7.5 150 | உரப்பசளைக்கு அதிக தூண்டற் பேறுடையது, நெல் கொப்புள ஈயின் உயிரியல் வடிவம் 1ஐ எதிர்த்து வளரும்.அரிசியின் நிறத்தை தவிர ஏனைய இயல்புகள் யாவும் பி.ஜி-94-1ஐ ஒத்தது. |
| பி.ஜி-352 | 7 140 | எரிவந்தம், கபில நிறத் தத்தி ஆகியவற்றைத் தாங்கி வளரும். பள்ள நாட்டு ஈர வலயத்தில் மணல் பொக் மண் ஆகியவற்றைக் கொண்ட வயல்களுக்குப் பொருத்தமானது. இரும்பு நச்சுத் தன்மையையும் கொண்டது. |
| பி.டபிள்யூ-267-3 | 3.5-4 70- 80 | எரிவந்தத்தையும் தாங்கி வளரும். மத்திய உயரமானது. |
| பி.டபிள்யூ-351 | 7 150 | பி.ஜி-346க்குச் சிறந்த பிரதியீடாகும்.குற்றும்போது அதிகளவு அரிசியாகும், எரிவந்தத்தைத் தாங்கி வளரும். இலை மடல் வெளிறல் நோயையும், இரும்பு நச்சுத் தன்மையையும் ஓரளவு தாங்கி வளரும். |
| ஏ.ரி-353 | 6 120 | அமில மண்ணை ஓரளவு சகித்து வளரும். எரிவந்தம், இலை வெளிறல் ஆகியவற்றை ஓரளவு தாங்கி வளரும். |
| ஏ.ரி-354 | 7 140 | உவர் மண்ணைச் சகித்து வளரும். |
| எல்.டி-355 | 5 100 | சிறிய விதைகள். எரிவந்தம், மணிகளில் தோன்றும் கபிலப் புள்ளி நோய்களை எதிர்த்து வளரும் இரும்பு நஞ்சை ஓரளவு தாங்கி வளரும். |
| எல்.டி-356 | 5 100 | சிறிய விதைகள். மணிகளில் ஏற்படும், கபிலப் புள்ளி நோயை எதிர்த்து வளரும். இலை மடல் வெளிறல், இரும்பு நஞ்சு ஆகியவற்றை ஓரளவு தாங்கி வளரும்.குற்றும்போது 71% உடையாத அரிசியைப் பெறமுடியும். குற்றிய அரிசியை பழுதில்லாமல் நீண்ட காலம் சேமித்து வைத்திருக்க முடியும். |
| பி.ஜி-380 | 7.5 150 | உலர் வலயம், இடை வலயம் ஆகியவற்றில் நீர்ப்பாசனத்தின் கீழ் செய்கைபண்ண மிகவும் பொருத்தமானது. கூடிய விளைச்சலைத் தரக்கூடியது. கபில நிறத் தத்திகளால் பாதிக்கப்படலாம். |
| பி.டபிள்யூ- 400 | 4 80 | உப்புத் தன்மையை ஓரளவு சகித்து வளரும். ஈர வலயத்திற்கு மிகவும் பொருத்தமானது. நெல் உமி கபில நிறமானது. |
| ஏ.ரி-401 | 4-5 80- 100 | உவர்த் தன்மையை சகித்து வளரும். பொக்காளி வர்கத்திற்கு மாற்றீடாகும். சாயும் டன்மையால் பாதிக்கப்படமாட்டாது. |

# ஜெயலலிதா மீதான வழக்கு ஆவணங்கள் 22 பேராசிரியர்களால் மொழி பெயர்ப்பு

**தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் சொத்து விவகாரம் தொடர்பான வழக்கின் ஆவணங்களை மொழிபெயர்க்க 22 பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.**

தமிழக முதல்வரின் மேலதிக சொத்து விவகாரங்கள் தொடர்பான வழக்கு பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதன்படி தமிழ் மொழியில் இருக்கும் வழக்கு ஆவணங்களை கன்னட, மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்த்து வருகின்றார்கள்.

மொழி பெயர்ப்பதற்கு ஏற்கனவே 14 தமிழ் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் விடுமுறையில் சென்றுள்ளதனால் அதனை நிவர்த்தி செய்யவும் மொழி பெயர்ப்புப் பணிகளை துரிதப்படுத்தவும் 14 தமிழ் பேராசிரியர்களும், 8 ஆங்கிலப் பேராசிரியர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



நவம்பர் மாத இறுதியில் மொழிபெயர்ப்பு பணிகள் பூர்த்தியடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்வரும் டிசம்பர் மாதம் ஜெயலலிதா மீதான வழக்கு பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## ஈ-ராக் குண்டுவெடிப்பில் 35 பேர் பலி; மேலும் பலர் காயம்



ஈராக்கிய தலைநகரின் சமாரா நகரில் நேற்று முன்தினம் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல் சம்பவம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 35 ஆக உயர்ந்துள்ளது. இது தவிர மேலும் பலர் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அமெரிக்கத் துருப்பினரையும் ஈராக்கிய பொலிசாரினையும் இலக்கு வைத்து இந்த தொடர் தாக்குதல்கள் இடம் பெற்ற போதிலும் பொதுமக்கள் பலரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இது தவிர 3 பொலிஸ் நிலையங்கள் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளன.

இந்தத் தாக்குதல்கள் காரணமாக 10 பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் கடும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க ஈராக்கியப் படையினர் இணைந்து சமாரா நகரை தமது காட்டுப்பாட்டிற்குள் கடந்த செப்டெம்பர் மாதம் கொண்டு வந்திருந்தனர். அந்த இராணுவ நடவடிக்கை அப்போது ஒரு வெற்றியெனக் கருதப்பட்டாலும் ஒருநகரை பாரிய தாக்குதல் மூலம் முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததாக கூற முடியாது எனச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

## யசீர் அறபாத் ஆபத்தான நிலையில் இல்லை; பேச்சாளர் கருத்து



பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அறபாத் ஆபத்தான நிலையிலே இருப்பதாக இவரது பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஆனால் அறபாத் கோமா நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படும் தகவல்களை அவர் நிராகரித்துள்ளார்.

சில தினங்களாக தொடர்ந்து நோய்வாய்ப்பட்டிருந்த பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அறபாத் பிரான்சில் உள்ள வேசி இராணுவ மருத்துவமனையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யசீர் அறபாத் கோமா நிலையில் உள்ளதாக வேசி மருத்துவமனை உயரதிகாரிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தாய்லாந்தில் இரண்டுக்கும் மேற்பட்ட பைத்தர்கள் கொல்லப் பட்டனர்.

இரண்டுக்குமதிகமான பைத்தர்கள் தாய்லாந்தின் தென் பகுதியில் கொல்லப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. அதில் சம்மந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் முஸ்லீம்கள் 85 பேர் வரை இராணுவப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் மேஜர் கறோவ் கோசிகானன்.

வயது 55 இவருக்குத் தலையில் சூடுபட்டிருக்கிறது. கடந்த வியாழனன்று காலையில் இவர் தனது குடும்பத்துடன் ஒரு மாளிகைக் கடையினருகில் நின்ற போது இச்சம்பவம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதே நேரம் கடந்த புதனன்று காலையில் நடந்த வேறு ஒரு சம்பவத்தில் தந்தையும் அவரது மகனும் தாக்குதலுக்கு உள்ளானதாக தெரியவரு கின்றது. இச்சம்பவத்தால் தந்தை அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். மகன் சொட்கை வேடிக்கையில் பட்டதுடன் உயிர் பிழைத்துக் கொண்டார்.

இவ்வருடம் ஜனவரிமாதம் முதல் 10 மாத வன்செயலில் அண்ணளவாக 450 அப்பாவி மக்கள் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. தாய்லாந்துக்குத் தெற்குப்பகுதியில் மலேசியா- தாய் எல்லையில் மேற்படி ஆயுதக்குழுக்களின் பிரதான தளம் இருப்பதாக தெரிந்ததையடுத்து அங்கு நடந்த மோதலில் 04 படையினர் கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

## றெயில் புரண்டு ஆறு பேர் பலி

பிரிட்டனில் அதி வேகப் புகையிரதம் ஒன்று தடம் புரண்டதில் ஆறு பேர் பலியாகியுள்ளனர் மற்றும் ஏழு பேர் படு காயமடைந்துள்ளனர். பிளிண்டன் நகரிலிருந்து இந்தப் புகையிரதம் சென்றபோதே விபத்து ஏற்பட்டுள்ளது.

மேற்படி புகையிரதத்தில் 300 பேர் வரை சென்றுள்ளனர். எட்டுப் பெட்டிகள் தடம் புரண்டுள்ளது. தற்போது தடம் புரண்ட பெட்டிகளை மீட்கும் பணிகள் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.



இந்தியப் பிரதம மந்திரி மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியாக் காந்தி ஆகியோர் செய்தி ஊடகங்களுக்காக தோற்றமளித்த போது எடுக்கப்பட்ட படம்.

''இப்தார் நோன்பு திறக்கும் விஷேட நிகழ்ச்சி ஒன்று புதுடில்லியில் இம்மாதம் மூன்றாம் திகதி நடந்த போது இப்படம் எடுக்கப்பட்டது.

# உலக செய்திகள்

## ஐவரிக்கோஸ்ரில் யுத்த நிறுத்தத்தை உடன் அமுல்படுத்த ஐக்கியநாடுகள் அறிவிப்பு

ஐவரிக் கோஸ்ரில் சர்வதேச அமைதி காக்கும் படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை விசேட அவசர கூட்டமொன்றை நடத்தியுள்ளது.

ஐவரிக்கோஸ்ரில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் 9 பிரான்ஸ் அமைதி காக்கும் படையினரும் அமெரிக்க மீட்புப் பணியாளர் ஒருவரும் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போதே அமைதிகாக்கும் படையினர் அதற்குள் இலக்காகி இருக்கின்றனர்.

ஐவரிக் கோஸ்ரில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நேற்று முன்தினம் கலந்துரையாடப்பட்டது. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கொபி அனான் தலைமையில் இந்த அவசரக் கூட்டம் இடம்பெற்றது.

## ஆப்கானிஸ்தான் பிரதமருக்கு ஐ.நா.செயலர் வாழ்த்து


ஐ.நாடுகள் செயலாளர் திருகோபிஅனான் அவர்கள் ஆப்கானிஸ்தானின் புதிய பிரதமர் கமீட் ஹர்ச்சாய் அவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.


மேலும் ஆப்கானிஸ்தானின் வாக்காளர்களுக்கும் வாழ்த்துத் தெரிவித்திருக்கும் செயலாளர் அமைதியாகத் தேர்தல் ஒன்றை நடாத்தி முடிக்க உதவிய உத்தியோகஸ்த்தர்கள் அனைவருக்கும் தனது மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார். வாக்குச் சீட்டுக்களை ஒழுங்காக எண்ணிக் கணக்கிட ஏற க்குறைய 25 நாட்கள் சென்றிருக்கின்றன.

## ஐக்கிய நாடுகள் செயலாளரின் எச்சரிக்கையை அமெரிக்கா உதாசீனம் செய்துள்ளது

அமெரிக்கப் படைகளுக்கு எதிராக தொடர்ந்தும் பாரிய தாக்குதலை மேற்கொண்டு வரும் பலூஜா போராளிகளுக்கு எதிராக திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும் படி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் கொபி அனானின் எச்சரிக்கையை அமெரிக்கா உதாசீனம் செய்துள்ளது.

பலூஜா நகருக்கு எதிராக அமெரிக்க குண்டு விமானங்களும்





யுத்த விலங்கு வானூர்திகளும்இரவு பகலாக குண்டுத் தாக்குதல்களை நடத்திய வண்ணம் உள்ளன.

இதே வேளை நகரின் எல்லையின் ஏராளமான படைக்குவிப்பு இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

இதே வேளை நகரின் எல்லையில் ஏராளமான படைக்குவிப்பு இடம்பெற்ற வண்ணம் உள்ளது. எந்த நேரமும் அமெரிக்கப் படையினர் தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என அஞ்சப்படுகின்றது.

அமெரிக்கா திட்டமிட்டுள்ள முறையிலான இந்தப்பாரிய தாக்குதலை ஆரம்பிக்கும் பட்சத்தில் சாதாரண அப்பாவி மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவர்கள் என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் மீண்டும் எச்சரித்துள்ளார். இது தவிர தை மாதத்தில் திட்டமிடப்பட்டுள்ள பொதுத் தேர்தலுக்கு குந்தகம் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அறபாத்தின் உடல் நிலையில் மாற்றமில்லை

தற்சமயம் பிரான்ஸ் நாட்டு வைத்தியசாாயில் அனுமதிக்கப்பட்டிருக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் அவர்களின் உடல் நிலையில் எதுவித மாற்றமுமில்லை. என்று தெரிவிக்க ப்படுகிறது.

சென்றமாதம் 24 ஆந் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யசீர் அறபாத்துக்கு என்ன வியாதி என்பதைக்கூட வைத்திய நிபுணர்களால் கண்டு பிடிக்க முடியாதுள்ளதாகவும் வைத்தியர் குழு தெரிவித்துள்ளது. அவர் தற்போது கோமா நிலையில் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் இதை அவரது உதவியாளர் மறுத்திருக்கிறார். இதே நேரம் யசீர் அறபாத் அவர்களின் சில பல அதிகாரங்களை பிரதமர் அகமட் ஹொாலிகி அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். என்ற கோரிக்கையும் தலைதூக்கியுள்ளது. இதன் மறுபுறம் யசீர் அரபாத் அவர்கள் ஒரு வேளை மரணமானால் அவரது பூதவுடலை அவர் பிறந்த இடமாகிய ஜெருசலேம் மண்ணில் அடக்கம் செய்வதற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளை இஸ் ரேல் நிராகரித்திருப்பதுடன் உடலை ஜெருசலமில் அடக்கம் செய்ய முடியாது என்றும் தெரிவித்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

## ஈராக்கில் 60 நாள் அவசர கால நிலை

ஈராக்கில் அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது. சமீப நாட்களாக அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களை அடுத்தே இந்த அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக ஈராக் இடைக்கால அரசு அறிவித்துள்ளது. இரு மாத காலத்துக்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த அவசர கால நிலைமையை பொறுத்து நீடிக்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம் எனவும் இடைக்கால அரச தரப்பு செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.




## பீனிங்சில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் வெற்றி

பீனிங்சில் நடைபெற்ற வெல்தவை குத்துச்சண்டைப் போட்டியில் அவுஸ்திரேலிய வீரரான கஸ்ரியா சூயு வெற்றி பெற்று மீண்டும் சம்பியனாகியுள்ளார். தம்முடன் போட்டியிட்ட அமெரிக்க வீரரான சம்ராமிக்சலை அவர் 2வது சுற்றில் தோற்கடித்துள்ளார்.

மிக்சல் போட்டியைத் தொடர முற்பட்ட போதும் அவரது உடல் நிலைக்கு ஏற்ப நடுவரான ராகுல் டேயிஸ் அனுமதியளிக்க மறுத்துள்ளார். 22 மாத இடைவெளிக்குப் பின்னர் சூயு மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.

## இந்திய கிரிக்கெட் சபையின் பவள விழாவிற்கு ஒரு நாள் போட்டியை நடாத்த சபை முடிவு



இந்திய கிரிக்கெட் சபையின் பவள விழாவினை முன்னிட்டு இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஒரு நாள் போட்டியொன்று நடை பெறவிருக்கின்றது.

எதிர்வரும் 13ம் திகதி கல்கத்தாவில் நடை பெறவிருக்கின்ற இப் போட்டியில் பங்கு பற்றுகின்ற இந்திய அணியினரின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கின்றது. அதன் படி சவ்ரவ் கங்குலி இந்திய அணிக்குத் தலைமை வகிக்கின்றார்.

யுவராஜ் சிங் தமிழகத்தின் சிறிதரன் சிறிதர், தினேஸ் கார்த்திக், காயம் காரணமாக சில போட்டிகளில் பங்குபெறாத இர்பான்கான் ஆகியோர் இந்தப் போட்டியில் விளையாடுவதன் மூலம் இந்திய அணியில் மீண்டும் இடம்பெறுகின்றார்கள்.

முரளி கார்த்திக் இந்தப் போட்டியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மாவீரர் தினத்தை முன்னிட்டு நெல்லியடியில் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி ஆரம்பம்

தமிழீழ விடுதலைப்புலிகள் மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் விளையாட்டுத் துறையினரின் ஏற்பாட்டின் கீழ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

நெல்லியடியில் இடம் பெற்ற முதல் கரும்புலித் தாக்குதல் சம்பவம் நடந்த நெல்லியடி மகா வித்தியாலயத்தில் இந்தச் சுற்றுப் போட்டியின் முதற் போட்டி இடம்பெற்றது இதில் யாழ்ப்பாணதுணை அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.செம்மணன் உட்பட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அட்வெட்டா சம்பியன் டெனிஸ்போட்டியில் விம்பில்டன் சம்பியன் மரியா ஷரபோவாவுக்குத் தோல்வி



பித்தல்பேயாவில் நடைபெற்று வரும் அட்வெட்டா சம்பியன் டென்னிஸ் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் விம்பிள்டன் சம்பியனான ரஷ்யாவின் மரியா ஷரபோவா தோல்வியுற்றுள்ளார். இவருடன் போட்டியிட்ட பிரான்ஸின் அமெரிமொரிஸ் மேர் வெற்றி பெற்றுள்ளார்.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் ரஷ்ய வீராங்கனையான பேராஸ் சுவோறரேவா தம்முடன் போட்டியிட்ட மற்றொரு ரஷ்ய வீராங்கனையான நரியபெட் ரோவாவை 6-3, 7-6 என்ற செட் கணக்கில் தோற்கடித்துள்ளார். அட்வெட்டா சம்பியன் இறுதிப் போட்டியில் அமெரிமொரிஸ்மோவும், பேராஸ்சுவோநரேவாவும் போட்டியிடவுள்ளனர்.

## இருபது விக்கெட்டுக்கள் ஒரே நாளில் வீழ்த்தப்பட்டது.

மும்பையில் நடைபெற்ற இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான கடைசி கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் மொத்தமாக 20 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன. இந்தியா தனது இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 205 ஓட்டங்கள் எடுத்தது. அவுஸ்ரேலிய அணியும் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைச் சேர்த்தது. இதன் போது இறுதி டெஸ்ட் போட்டி மூன்று நாட்களிலேயே நிறைவடைந்துவிட்டது.

## பெண்களுக்கான சம்பியன் கிண்ண ஹொக்கி போட்டியில் மூன்று நாடுகள் முன்னிலை

பெண்களுக்கான ஹொக்கி சம்பியன் சிப் போட்டியில் சீனா நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான போட்டிகளில் நெதர்லாந்து பெண்கள் அணி 2:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கும் ஜேர்மனுக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் ஜேர்மன் அணி வெற்றி பெற்றது.

இதுவரை நடைபெற்ற போட்டியில் பெற்ற புள்ளிகளுக்கு ஏற்ப நெதர்லாந்து, ஜேர்மன் அணிகள் தலா மூன்று புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் இருக்கின்றன.

நெதர்லாந்து, சீனா, ஜேர்மன், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஆஜன்டீனா, ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டிகள் நேற்று நடைபெற்றது.

## இறுதிக் கரப்பதாட்டத்தில் வடக்கு கிழக்கு அணி இல்லை

அகில இலங்கை ரீதியாக பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டு வந்த கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிக்கட்டப் போட்டிகள் எதிர்வரும் 11ம் திகதி சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் வடக்குக் கிழக்கு உட்பட 20 பாடசாலைகளில் இருந்து 865 பாடசாலை அணிகள் பங்கு பற்றிமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு பஸ் நிலைய மலசல கூடத்தை மாநகர சபை கவனிக்குமா?

மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் அமைந்துள்ள பொது மலசல கூடத்தை கவனிப்பது யார்? என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது. இங்குள்ள மாநகர் சபை என்ன செய்கின்றது என பயணிகள் முணுமுணுக்கின்றனர். ஏனெனில் இந்த மலசல கூடத்தின் மலசல கழிவுகள் பல மாதங்களாகவே சுத்தப்படுத்தப்படாமல் இருக்கின்றது. பார்த்தாலே வயிற்றைக் குமட்டி வாந்தியெடுக்கும் நிலைமையே ஏற்படுகின்றது என மட்டக்களப்பு பஸ் நிலையத்திற்கு வந்து தமது பஸ் பயணத்தைத் தொடரும் பயணிகள் ஈழநாதத்திற்குச் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த மலசல கூடம் பற்றி பயணி ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவிக்கையில் ''நான் கடந்த 1ஆம் திகதி பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுக் கழிப்பறைக்கு போன போது இதனது நிலைமையை நேரடியாகவே காண முடிந்தது. எனவும் நான் இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்றிருக்கின்றேன் இந்தப் பொதுக் கழிப்பறையைப் போன்று அந்தப் பகுதிகளில் உள்ள கழிப்பறைகள் இல்லை அவற்றை கவனிப்பதற்கென மாநகர சபை ஊழியர்களை நியமித்து தினமும் சுத்தப்படுத்துகின்றார்கள். அந்தக் கழிப்பறைகள் மிகவும் சுத்தமாகவே இருக்கின்றது. ஆனால் ''மீன்பாடும் தேனாடு" என்று வர்ணிக்கப்படும் மட்டக்களப்பு பஸ் நிலைய பொதுக் கழிப்பறையின் சுத்தமின்மையை பார்த்து நான் மிக்க வேதனையும் வெட்கமுமடைந்தேன்" எனக்கூறினார்.

மேலும் ஒரு பயணி பஸ் நிலைய மலசல கூடத்தில் சுத்தமின்மையைப் பற்றிக்கூறுகையில் ''இதனைப் பார்த்தால் இது மலசல கூடமா? அல்லது சாக்கடையா? என எண்ணத் தோன்றுகின்றது. சாக்கடையையும் விட மிகவும் மோசமான நிலையிலேயே இந்த மலசலகூடம் இருக்கின்றது. இங்கு செயற்படும் மாநகர சபை என்ன கண்ணை மூடித் தூங்குகின்றதா? இந்த மலசல கூடத்தின் நிலைமையால் பயணிகள் சுகாதாரச் சீர்கேட்டையே எதிர்கொள்கின்றனர். இதனை உரியவர்கள் கவனித்து மலசலகூடத்தைச் சுத்தமாக வைக்க வழிவகுக்க வேண்டும் என்றார்.

அடுத்து இந்த மலசல கூடத்தின் நிலைமை பற்றி எங்கள் குரலுக்கு இன்னமொரு பயணி கூறுகையில் ''அண்மைக் காலங்களில் நான் எனது தொழில் நிமிர்த்தம் மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம், கொழும்பு, போன்ற பல மாவட்டங்களுக்குச் சென்று திரும்பியிருக்கின்றேன் அங்குள்ள பஸ் நிலையங்களில் எமது பஸ் நிலைய பொதுக் கழிப்பறை போல் கண்டதில்லை அங்குள்ள கழிப்பறைகள் மிகவும் சுத்தமாகவே இருக்கின்றது. அங்கும் நகர, மாநகர சபைகளே பொதுக் கழிப்பறைகளைக் கவனித்து வருகின்றன. ஒரு வேளை மட்டக்களப்பில் மாநகர சபை இல்லையோ என்ற சந்தேகமே எனக்கு தோன்றுகின்றது" என்றார் இந்தப் பயணி மட்டக்களப்பிலிருந்து தூர இடம் ஒன்றுக்கு அதிகாலை பஸ் ஸில் பயணத்தை மேற்கொள்ள வந்த பயணி, ஒருவர் பஸ் நிலையப் பொது மலசலகூடம் பற்றிக் கருத்துக் கூறுகையில் ''இதனை நிர்வகித்துக் கவனிப்பது மாநகர சபையா? அல்லது இலங்கைப் போக்குவரத்துச் சபையா? என்பது எனக்கு விளங்கவில்லை. இது எவரது பராபரிப்பின் கீழ் இருந்தாலும் பரவாயில்லை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகக் கவனமெடுத்து இந்த மலசல கூடத்தைத் தினமும் சுத்தமாக வைத்திருப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்" என்பது எனது வேண்டுகோள் என்றார்.

இன்னுமொரு பயணி கூறுகையில் ''இதில் மாநகர சபையை மட்டும் குறைகூறுவதில் பயனில்லை இந்தப் பஸ் நிலையத்திலிருந்து பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் ஒவ்வொருவரும் பொதுக் கழிப்பறையைப் பயன்படுத்தும் போது பயன்படுத்திய பின்பு கூடுதலான நீரினை விட்டு சுத்தமாக வைத்திருப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். ஏனெனில் இங்கு உள்ளூர் பயணிகள் மாத்திரம் வருவதில்லை. வெளியூரில் இருந்தும் ஆயிரக்கணக்கான பயணிகளும் வருகின்றார்கள் இவர்கள் இந்த மலசல கூட த்தின் அசுத்தத்தை தமது இடங்களில் சென்று சொல்லாத அளவு கவனிக்க வேண்டியது எமது அனைவரதும் கடமையல்லவா? என்றார். எனவே இது விடயமாக மட்டக்களப்பு மாநகர சபையினர் செயற்பட்டு பொது மலசல கூடத்தைச் சுத்தமாக வைத்திருப்பதற்குரிய நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டும் என ஈழநாத மூடாக பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். இதனை செயற்படுத்துவது மாநகர சபை ஆணையாளரின் கடமைய ல்லவா?

**பயணிகள்.**

## எங்கள் குரல்

## தங்கவேலாயுதபுரத்தில் அதிகரித்துக் காணப்படும் கால்நடைகளின் தொல்லை

அம்பாறை மாவட்டத்தில் மீள் குடியேற்றக் கிராமமாக உள்ள தங்கவேலாயுதபுர கிராமத்து மக்கள் தமது கிராமத்துக்கு வந்து மீள் குடியமர்ந்துள்ளதுடன் இம்முறை பெரும் போக நெற் செய்கையிலும், மேட்டு நிலப் பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இப்பகுதிகளில் உள்ள கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும், சகல பகுதிகளிலும் உள்ள கால்நடை சொந்தக்காரர்களும் தங்கள் கால் நடைகளை இப்பிரதேசத்திற்குக் கொண்டு வந்து மேய்ச்சல் செய்கின்றனர். இதனால் தமது பயிர்களை இக்கால்நடைகள் சேதப்படுத்துவதாக தங்கவேலாயுதபுர மக்கள் விசனமடைந்துள்ளனர்.

கால்நடைகளின் தொல்லையால் ஆரம்பத்திலேயே பயிர்ச் செய்கையில் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டி வரும் என்று இக்கிராம மக்கள் கூறுகின்றனர். ''காட்டு மிருகங்களை" காவல் காப்பது போன்று இந்த கால்நடைகளின் தொல்லையால் பயிர் செய்ய ஆரம்பித்ததிலிருந்து இரவில் கண் விழித்து காவல் காக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைமையை தாம் எதிர்கொள்வதாக தங்கவேலாயுதபுர மக்கள் தமது கவலையை ஈழநாதத்திற்குக் கூறுகின்றனர். இந்த செயற்பா[illegible]னது ஆரம்பக் கட்டத்தில் கால்நடை வளர்ப்போருக்கும், பயிர்ச் செய்கையாளர்களுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலாக அமைந்துள்ளதாக தங்கவேலாயுதபுர விவசாயகப் பிரதிநிதி ஈழநாதத்திற்குத் தெரிவித்தார். மேலும் இது சம்மந்தமாக பெரும்பாக உத்தியோகத்தர் கவனத்திற்குக் கொண்டு வந்தும் அவர் பாராமுகமாகவே இருப்பதாகக் இக்கிராமக்கள் மிகவும் கவலையுடன் கூறுகின்றனர்.

பெரும்பாக உத்தியோகத்தரே! ஏன்? இந்தப் பாராமுகம் இம் மக்கள் மீள் குடியேறியவர்கள் தானே இவர்கள் எப்படியென்றாலும் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்தட்டும் என்ற சிந்தனையிலா? செயற்படுகின்றீர்கள் மீள் குடியேறிய இம்மக்களுக்கு எதுவித அடிப்படை வசதிகளையும் செய்து தராத நிலையில் தங்களது ஜீவனோபாயத் தொழிலையாவது செய்வோம் என்று பயிர்ச்செய்கையில் ஈடுபட்டால் கால்நடைகள் அவர்களது பயிரை அழித்து நாசம் செய்கின்றது இது விடயமாக தங்கவேலாயுதபுரத்து மக்கள் உங்களுக்கு அறிவித்தும் இதற்குரிய நடவடிக்கையை மேற் கொள்ளாது நீங்கள் இருப்பது இம் மக்களுக்கு மிகவும் மனவேதனையை அளித்துள்ளது. எனவே தயவு செய்து கால்நடை உரிமையாளர்களைச் சந்தித்து அவர்களுடன் பேசி கால் நடைகள் இக்கிராமத்தில் செய்கை பண்ணியுள்ள பயிர்களை நாசம் செய்வதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எங்கள் குரலூடாகக் கோரிக்கை விடுக்கின்றோம்.

**-பொது மக்கள், தங்கவேலாயுதபுரம்.-**

## சிந்தனைக்கு



தனது மனவுலக ஆசைகளிலிருந்தும், அச்சங்களிலிருந்தும் தன்னை விடுதலை செய்து கொள்பவன்தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகமையைப்பெற முடியும்.

*மேதகு. வே.பிரபாகரன்.*
*தமிழீழத் தேசியத் தலைவர்*

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி :- 065-2226110,
065-2226303,
batti@eezhanatham.com
08-11-2004

# இந்தியாவை உள்வாங்க துடிக்கும் சிங்கள தேசம்

சமாதான முயற்சிகளில் ஐரோப்பிய நாடு தலையிடுவதை விட அருகில் இருக்கும் இந்தியா தலையிட வேண்டும் என்பதையே தற்போது சிங்கள தேசம் விரும்புகிறது.

விடுதலைப் புலிகளை தடைசெய்துள்ள இந்தியா இந்த விவகாரத்தில் தலையிடுமாக இருந்தால் அது விடுதலைப் புலிகளுக்கு சாதகமான எந்த அம்சத்தையும் கொண்டிருக்காது. எனவே எந்த வழிமுறையிலாவது இந்தியாவின் முழு ஆளுமையும் இனப்பிரச்சினை விவகாரத்தில் திணித்து சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் ஆளும் தரப்பின் முழு நோக்கமாகும். இந்த விவகாரத்தில் பிரதான எதிர்க் கட்சியான ஐ. தே. கட்சியும் இந்தியாவின் ஆதிக்கம் அதிகரிக்க வேண்டும் என்பதையே விரும்புகின்றனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் அரும்பு விட்ட காலத்தில் ஈழத்தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழகம் உணர்வுடன் குரல் கொடுத்தது. தமிழகத் தலைவர்களின் உணர்ச்சி வசப்பட்ட அறிக்கைகளும் தமிழகத் தமிழ் மக்களின் உணர்வெழுற்சியும் ஈழத்தமிழ் மக்களை அரவணைக்கும் கைகளாக இருந்தன. எனினும் இந்தியாவின் மனப்பாண்மை தமது சுயலாபச் சிந்தனையோடு ஒட்டியிருந்தது. கடந்த 1987ம் ஆண்டு ஈழத்தமிழ் மக்களின் உரிமையை பெற்றுத் தருவதாகக் கூறி ஜே. ஆரும். ராஜிவும் செய்து கொண்ட உடன்படிக்கையும் அதன் பின் அமைதிப்படை எனக்கூறி காலூன்றிய இந்தியப் படையும் ஈழமண்ணை இரத்தம் தோயவைத்தது. தமிழ்ப் பெண்குலம் அச்சம் கொள்ளுமளவிற்கு அவர்களது உணர்வுகள் தலை விரித்தாடின. இறுதியில் இலக்கை அடைய முடியாது உலக வல்லரசு ஒன்றின் இராணுவம் ஒரு கெரில்லா அமைப்பை வெல்லமுடியாது என்ற விதியுடன். தோல்வியுடன் ஈழ மண்ணை விட்டு வெளியேற வேண்டியேற்பட்டது. இதனை ஈழவிடுதலைப் போராட்டத்தை ஆளமாகக் கற்றால் புரியும். தமிழகம் ஈழத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்த காலத்திலிருந்து இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான 2ம் ஈழப்போர் ஆரம்பமாகும் வரை சிங்களதேசம் இந்தியாவைப் பக்கச் சார்பாகச் செயற்படுவதாக குற்றம் சாட்டி வந்தன. தற்போது ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான நோர்வே மேற்கொண்டுவரும் சமாதானப் பேச்சுக்கான அனுசரனைப் பணிமீது இன்றைய ஆளும் தரப்பும் பேரினவாத சக்திகளும் கடுமையான அதிருப்தி கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐக்கிய தேசிய முன்னனி ஆட்சிக் காலத்தில் நோர்வேமீது ஜனாதிபதி தரப்பு வெளிப்படையாக பல தடவைகளில் குற்றம் சாட்டியிருந்தனர்.

சர்வதேச சமூகம் நோர்வேயின் அனுசரணைப் பணி குறித்து திருப்தியான அனுகுமுறைகளை பேணிவருவதால் தமது தரப்பு ஆட்சிக்கு வந்த பிற்பாடு அதே நோர்வேயின் அனுசரனைப் பணியினையே தொடர வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. எனினும் விடுதலைப் புலிகளுக்கு நோர்வே ஆதரவாக செயற்படுகிறது என தென்னிலங்கைப் பேரினவாத சக்திகள் தெரிவித்து வரும் விசமப் பிரசாரங்கள் ஒரு புறமிருக்க ஐரோப்பிய நாடு ஒன்று அனுசரணை வழங்குமானால் அது தமிழ் மக்கள் நலன் சார்ந்ததாகவே அமைய இடமுண்டு என சிங்கள தேசம் கருதுகிறது.

இதனால்தான் எந்தவழியிலாவது இந்தியாவின் ஆதிக்கத்தை சிறிலங்காவில் காலூன்ற வைத்து இனப்பிரச்சினை விவகாரத்தில் பொறி வைக்கும் தந்திரோபாயங்களை ஆளும் தரப்பு ஏற்படுத்தி வருகிறது. சமீப காலமாக இந்தியப் படை அதிகாரிகளின் சிறிலங்கா இந்திய பயணமும் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் வருகையும் இதனையே வெளிப்படுத்துகின்றன.

தற்போது சிறிலங்கா இந்தியா வருவதற்கான வாசலைத் திறந்து விட்டுள்ளது. அத்துடன் சேது சமுத்திரத் திட்ட விவகாரத்தால் இலங்கைக்கு சில பாதிப்புக்கள் ஏற்படக்கூடும். என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளமை, இந்திய இலங்கை மீனவர் விவகாரம் போன்றவைகளில் கூட சிங்கள ஆளும் தரப்பு தலையிடாக் கொள்கைகளை கடைப்பிடித்து வருகின்றது என்பது வெளிப்படை. இந்நிலையில் மீண்டும் இந்தியா தலையிடுமானால் அது ஈழத்தமிழ் மக்களுக்கான உரிமையை தங்குதடையின்றி வழங்குவதற்கு சாதகமான போக்கை கடைப்பிடிக்குமா என்பது கேள்விக்குறி.

# மருத்துவ வசதிகளை பெறமுடியாத மக்களை தேடிச்சென்று சிகிச்சையளிப்பதே எமது நோக்கம்

## புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் சி. இராஜகுலேந்திரன்

**மருத்துவ வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத மக்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கமாகும். இவ்வாறு போரதீவுப்பற்று பிரதேச புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் திரு.சி.இராஜகுலேந்திரன் தெரிவித்தார்.**

தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினருடன் இணைந்து புனர்வாழ்வுக் கழகம் கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்தியர் குழாமைக் கொண்டு திக்கோடையில் நடமாடும் வைத்தியசேவை ஒன்றை நடாத்தினர். இச்சேவை தொடர்பாக அவர் மேலும் கருத்துக் கூறுகையில் போரதீவுப் பிரதேசத்தில் வைத்தியசாலைகள் மிகமிக அரிதாகவே உள்ளன. அவைகூட ஒழுங்காக இயங்குவதில்லை. மருந்துவகை தட்டுப்பாடு, வைத்தியர்கள் விடுமுறையில் சென்றால் பதில் வைத்தியர்கள் நியமிக்கப்படாமை இவற்றுக்கும் மேலாக போக்குவரத்து வசதியின்மை. போன்ற காரணங்களைக் கருத்தில் கொண்டு இதனை நடாத்தி வருகின்றோம். இவற்றுக்கும் மேலாக தற்போது மழைக்காலம் ஆரம்பித்து உள்ளமையால் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயமும் உள்ள இடங்களிலேயே இவ்வாறான சேவைகள வழங்கி வருகின்றோம். இங்குவரும் நோயாளர்களுக்கு சாதாரண நோயுடையவர்கள், கண், பல், கர்ப்பிணிப் பெண்கள், எனப் பிரிக்கப்பட்டு விஷேட சிகிச்சைகள் வழங்கப்படுகின்றது. மேலதிக சிகிச்சை தேவைப்படுபவர்களை இனங்காணுமிடத்து அவர்களை எமது புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்று எமது முழு அனுசரனையுடன் அவர்களுக்கு சிகிச்சை வழங்கவுள்ளோம் என்றார். இந்நடமாடும் சேவையின் போது டாக்டர். ச. முருகானந்தம் தலைமையிலான மருத்துவக் குழுவினர் பங்கேற்றிருந்தனர். போரதீவுப்பற்று புனர்வாழ்வுக் கழகத் தலைவர் ஆ.கந்தையா தமிழீழ விடுதலைப் புலிகளின் சுகாதாரப் பிரிவுப் பொறுப்பாளர் கே.செல்வக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்

(ஹரி)

மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவையை புனரமைப்புச் செய்ய வேண்டியுள்ளது. பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் இதை நடைமுறைப்படுத்த நடவடிக்கையெடுப்பேன். இவ்வாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் வே.சண்முகம் தெரிவித்தார்.

கடந்த 06ம் திகதி சனிக்கிழமை வின்சன் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையில் நடைபெற்ற மட்டக்களப்பு மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே இக்கருத்தைத் தெரிவித்தார். இவர் மேலும் பேசுகையில் கடந்த காலங்களில் சிறப்பாகச் செயற்பட்ட மாவட்ட கலாசாரப் பேரவை நடவடிக்கைகள் முன்னைய கலாசார உத்தியோகத்தர் செல்வி தங்கேஸ்வரி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பின் ஸ்தம்பித நிலை அடைந்துள்ளது. புதிய மாவட்ட கலாசார உத்தியோகத்தரின் துணையுடன் அதை சுறுசுறுப்பாக இயங்க வைத்து எமது கலாசார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என்று தெரிவித்தார்.

சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ம.தேவராஜன் உரையாற்றுகையில் மனிதனுக்குப் பலவித தேவைகள் இருந்தாலும், ஆரோக்கியமான, நிம்மதியான வாழ்க்கையில் மகிழ்ச்சி தேவை. இதை கலைகள் மூலம் பெறலாம் எமது கலைகள வளர்ச்சியடைய உழைப்பவர்கள் மனித சமுதாயத்தை மகிழ்ச்சிப்படுத்துவார்கள். அவர்களின் பணி போற்றுதற்குரியது என்று தெரிவித்தார்.

# வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடன் தமிழீழ காவல் துறையினர் கருத்தூட்டல் நிகழ்வு

(நமது நிருபர்)

வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடன் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவினர் கிளிநொச்சிப் பகுதியில் பல இடங்களிலும் வீதி விபத்துக் கருத்தூட்டல் நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது.

கடந்த 5ம் திகதி கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப்பணியகத்தில் காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை கருத்தூட்டல்களை நடாத்தினர். இக்கருத்தூட்டல் நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக் கழக நிருவாகப் பொறுப்பாளர் வின்சன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வீதி விபத்துத் தொடர்பான கருத்துக்களை தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுக் கண்காணிப்பாளர் கு.கனகலிங்கம், பொறுப்பாளர் சி.சிவகுமாரன், துணைப் பொறுப்பாளர் ஜீவானந்தம் வழங்கினார்கள். இதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் பணியாற்றும் பல உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதேபோன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள சேரன் நடுவகப் பணியகத்தில் மாலை 3.00 மணியளவில் வீதி விபத்துத் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு நடைபெற்றது. இதில் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுக் கண்காணிப்பாளர் கு.கனகலிங்கம், பொறுப்பாளர் சி.சிவகுமாரன் கருத்துரைகளை நிகழ்த்தினார்கள். இக்கருத்தூட்டல் மாலை 4.30 மணி வரை நடைபெற்றது.

06.11.2004 அன்று கிளிநொச்சி நகருக்கு அண்டிய பகுதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனங்களான ஆதவன், புதிய கல்வி நிறுவனம் என்பவற்றில் காலை 10.00 மணி தொடக்கம் 11.30 மணி வரைக்கும், பி.ப 12.00 மணி தொடக்கம் பி.ப 1.00 மணி வரையும் அங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கான கருத்தூட்டல் நடாத்தப்பட்டது.

கருத்தூட்டல் நிகழ்வில் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் கருத்துக்களை வழங்கினார். இக்கருத்தூட்டல் நிகழ்வில் 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து பயன் பெற்றனர்.

இதேபோன்று 07.11.2004 அன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள மாவட்ட அரசியல் துறைப் பணிமனையில் காலை 9.00 மணிக்கு முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கான கருத்தூட்டல் நடைபெற்றது. இதில் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் வீதி விபத்துத் தொடர்பான கருத்துக்களை வழங்கினார்.

இக்கருத்தூட்டல் நிகழ்வு மு.ப 11.00 மணி வரை நடைபெற்றது. இதில் 60க்கும் மேற்பட்ட முச்சக்கர வண்டிச் சாரதிகள் கலந்து கொண்டனர். தற்போது மழை காலத்தில் ஏற்படுகின்ற விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் மக்கள் மத்தியில் ஓர் வழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அரச, அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள் என்பனவற்றில் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவினர் வீதி விபத்துக்கள் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வுகளை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



தமிழீழ சுகாதாரப் பிரிவினருடன் பி.பி.டி.ஆர்.ஓ. இணைந்து திக்கோடையில் நடாத்திய மருத்துவ முகாமில் மருத்துவக் குழுவிற்குத் தலைமை தாங்கி வருகை தந்த டாக்டர் ச.முருகானந்தம் சிகிச்சையளிப்பதையும், சிகிச்சை பெற வந்த பொது மக்களையும் படங்களில் காணலாம்.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# ஆளுனரின் யாழ் பயணம் குறித்து ஈழவேந்தன் எம்.பி.கண்டனம்

(நமது நிருபர்)

**பலரது எதிர்ப்புக்களையும் மீறி ஆளுநர் யாழ் குடாநாட்டுக்கு வந்து, ஆசிரியர் பயிற்சிக் கலா சாலை, பொது நூலகம், தெல்லிப் பழை புற்றுநோய் வைத்தியசாலை உள்ளிட்ட பல்வேறு இடங்களையும் பார்வையிட்டுச் சென்றுள்ளமை கண்டிக்கத்தக்கது, என நாடாளு மன்ற உறுப்பினர் ஈழவேந்தன் தெரி வித்தார்.**

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் - ஆளுநர் வருகைதந்து யாழ் அரச அதிபருடன் கைலாகு கொடுத்து ஏதோ உறுதியளித்து தென்னங்கன்றும் நாட்டி யாழ் பொது நூலகம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகிய இடங்களையும் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

எமக்குக் கிடைத்த செய்தியின் படி யாழ் பொதுசன நூலகம் வெளியுறவு அமைச்சின் கீழ் தான் இயங்கும் என்றும் அறிகின்றோம். ஆனால் அது உண்மையில் உள்ளூராட்சி அமைப்பின் கீழ் இயங்கவேண்டியது. எனவேதான் ஆளுநரின் வருகையின் உள்நோக்கம் யாதோ யாம் அறியோம். யாழ் நூலகத்தை அன்று எரித்தவர்கள் வெறும் சிங்களப் பொது மக்கள் அல்ல. சிங்களத் தலைமைப்பீடங்களின் தூண்டுதலில்தான் குறிப்பாக முன்னாள் அமைச்சர்களான சிறில் மத்தியூ, காமினி திஸநாயக்க ஆகியோரின் தூண்டுதலால் ஆசியாவின் தலை சிறந்த நூலகமான எமது யாழ் நூலகம் 1981ஆம் ஆண்டு தீக்கிரையாக்கப்பட்டது.

இவற்றை நாம் எளிதில் மறப்பதற்கில்லை. எனவே தான் பதினெண்ணாயிரம் விடுதலைப் புலிகளின் சாவிற்கும் அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களின் உயிரிழப்பிற்கும், உடமைகளைப் பொறுத்தவரையில் கணக்கிட முடியாத அளவில் கோடிக்கணக்கான இழப்பிற்கும் ஆளாக்கப்பட்ட நாம், அழையா விருந்தாளிகளாக இங்கு வருகைதரும் சிங்கள தலைமைப் பீடத்தின் தூதுவர்களையும், அவர்கள் எம் நிலையைப் பார்த்து முதலைக்கண்ணீர் வடிப்பதையும் வன்மையாகக் கண்டிப்பதோடு - செயல் வடிவிலும் எம் எதிர்ப்பைக் காட்டுகின்றோம்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் எமக்கு இத்துறையில் முன்னோடிகளாக விளங்கி, முன்னாள் புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன சில காலத்திற்கு முன்பு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது கண்ணியத்துடன் அவர்கள் காட்டிய எதிர்ப்பை நாம் நன்றியுணர்வோடு நினைவு கூருகின்றோம்.

எனவேதான் இலட்சக்கணக்கில் எம்நாட்டு பனை, தென்னை வளங்களை அழித்தவர்கள், பொதுமக்கள் அறியாத நிலையில் பின்கதவால் பலாலி விமான நிலையத்தில் இறங்கி மேற்குறிப்பிட்ட இடங்களைப் பார்வையிட்டு தென்னங்கன்றுகள், மாங்கன்றுகள் நட்டு, எம்மை ஏமாற்ற முயல்வதை, யாழ் அரச முகவர் உணர்ந்தோ, உணராமலோ மக்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாது ஆளுநரை கைலாகு கொடுத்து வரவேற்று மேற்குறித்த இடங்களை பார்வையிட வைத்தமை மிகவும் கண்டிக்கத்தக்கது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## திருமலை மாவட்டத்தில் டெங்கு நோய் அபாயம்



(எஸ்.சசிக்குமார்)

திருமலை மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக சுகாதார பிரிவினர் அறிவித்துள்ளனர்.

கடந்த மாதம் டெங்கு நேயினால் 4 வயது குழந்தை இறந்ததுடன் ஆறுபேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து விழிப்புணர்வு சுகாதார நடவடிக்கைகள் தொண்டர் அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

நேற்றும் நேற்றுமுன்தினமும் லயன்ஸ் கழகத் தொண்டர்கள் வீதிகளில் தேங்கி நிற்கும் குப்பை கூழங்களை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

## அனுமதியின்றி ஏறாவூரில் தொலைபேசி கேபிள் இருவார காலத்துக்குள் அகற்ற நடவடிக்கை!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் நகர பிரதான வீதியில் அமைந்துள்ள பாலமொன்றின் கீழ் பொருத்தப்பட்டுள்ள தொலைபேசிக் கேபிள்கள் அடுத்த இரண்டுவார காலத்திற்குள் அகற்றப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக ஏறாவூர் நகர பிரதேச சபையின் தலைவர் ஏ.அப்துல் நாஸர் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

இது குறித்து அவசர கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அனுமதியின்றி பொருத்தப்பட்டுள்ள இக்கேபிள்கள் நீர் வடிந்து செல்வதைக் தடை செய்வதனால் ஏறாவூர் நகரம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளம் வடிந்து செல்வதற்கு இக்கேபிள்கள் தடையாக அமைந்துள்ளதனால் கடந்த சுமார் ஐம்பது வருடங்களுக்குப் பின்னர் சென்ற ஆண்டில் ஏறாவூர் நகரம் பாரிய வெள்ள அனர்த்தத்தை எதிர் நோக்கியதையும் இக்கடிதத்தில் பிரதேச சபைத் தவிசாளர் அப்துல்நஸார் சுட்டிக்காட்டியுள்ளார்.

**காத்தான்குடியில்...**

உலமா சபையால் காத்தான்குடி பள்ளிவாயல்களில் அறிவிக்கப்பட்டது.

கடந்த 1979ம் ஆண்டு ஜம்மியத்துல் உலமா சபை பிரகடனப்படுத்திய ஏகத்துவத்தின் ஊடுருவல், முக்த்தப்பஹ்வாபும் ரத்துச் செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்த சமாதான செய்தி அறிவிக்கப்பட்டதையடுத்து காத்தான்குடி பதுறியா ஜும்மாப் பள்ளிவாயலுக்கு காத்தான்குடி ஜம்மியத்துல் உலமா சபையின் சகல பிரிவினரும் அங்கு சென்று அப்துல் ரவூப் மௌலவியின் பள்ளி வாயலில் புனித நோம்பு திறக்கும் இ∴தார் நிகழ்வை கொண்டாடினர்.

அங்கு ரவூப் மௌலவி தரப்பை சேர்ந்த சமன் மௌலவி தலைமையில் விசேட தொழுகையும் இடம்பெற்றது.

**கிளிநொச்சி...**

திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரெலோவினால் வறிய மாணவர்க்கு நிதியம்

(எஸ்.எஸ்.குமார்)

ரெலோவினால் போரினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உதவி நிதியம் ஒன்றை நேற்று திருமலையில் வைப்பு செய்தது.

நகர்புறத்தே போரினால் பாதிக்கப்பட்டு வசதி குறைந்த மாணவர்கள் 35 பேர் இனங்காணப்பட்டு இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 500 ரூபா மக்கள் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

அடுத்த கட்டமாக மூதூர், கந்தளாய் பகுதியிலுள்ள 100 மாணவர்களுக்கும் இந்த நிதியம் வைப்பிலிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கலந்துகொண்டார்.

## சத்துருக்கொண்டானில் தலைமைத்துவப் பயிற்சி

(தனஞ்ஷயன்)

மட்டக்களப்பு மாவட்டத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தும் இளம் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நேற்றுக்காலை 9.00 மணியளவில் சத்துருக்கொண்டான் சர்வோதய மண்டபத்தில் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே. தவராசா தலைமையில் ஆரம்பமானது.

3 நாள் வதிவிட பட்டறையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருந்து 50 இளைஞர்கள் பங்குபற்றினர். நேற்று நடைபெற்ற இவ் ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண பணிப்பாளர் பொன். செல்வநாயகம், மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் மன்ற தலைவர் பிரசாந்தன் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

**கி.பல்...**

னமும் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மாபெரும் புத்தக கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளது.

## மட், அறநெறி மாணவர்களுக்கு சமய வினாவிடை பரீட்சை

(தனஞ்ஷயன்)

நாவற்குடா இந்து கலை வளர்ச்சி மன்றத்தினால் வருடம் தோறும் மாவட்டத்திலுள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்படும் சமய வினா விடைப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ம் திகதி நடைபெறவுள்ளது.

இம்முறை பரீட்சைக்கு 1450 மாணவர்கள் பங்கு பற்றவுள்ளமையினால் இப்பரீட்சை வலய மட்டங்களில் நடாத்தப்படவுள்ளன.

இதில் பட்டிருப்பு கல்வி வலய மாணவர்களுக்கான பரீட்சை களுதாவளை மகா வித்தியாலயத்திலும், மட்டக்களப்பு வலய மாணவர்களுக்கான பரீட்சை கல்லடி விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலத்திலும், கல்குடா கல்வி வலய மாணவர்களுக்கான பரீட்சை செங்கலடி மத்திய கல்லூரியிலும் நடாத்தப்படவுள்ளது.

இவர்களிற்கான அனுமதிப்பத்திரம் அந்தந்த அறநெறி பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இசை மூலம் சமாதான செய்தி திருமலையில்!

(எஸ்.சசிகுமார்)

திருமலை புனித மரியாள் கல்லூரி மாணவர்கள் நகர்புற தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களை கொண்டு இசை மூலம் சமாதானச் செய்தி எனும் தொனிப்பொருளிலான பாடல் நடனங்கள் மேடை ஏற்றப்பட்டன.

மூவினத்தையும் சேர்ந்த சுமார் நூறு மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் திருமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதி டக்கின் எற்றறெட் அதிதியாகக் கலந்து கொண்டார்.

இங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமே என்பதையே எதிர்பார்க்கிறேன். சமாதானப் பேச்சு விரைவில் நடைபெறவேண்டும், போர் நிறுத்தத்தை செம்மையாக அமுல்படுத்த கண்காணிப்புக்குழு அர்ப்பணிப்புடன் செயற்படும் எனக் குறிப்பிட்டார்.

**ஆரையம்பதியில்...**

ப்பட்டுள்ள அந்த ரிக்கட் குறித்து வாங்கும் பாமரமக்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள் என்றும் படையினரின் அச்சம் காரணமாகவே அனுமதிச் சீட்டுகளை ரூபா 30 கொடுத்து வாங்கி செல்வதாக பொது மக்கள் தெரிவித்தனர்.

**650 பாடசாலை**

படுத்தப்படவுள்ளது.

திருமலை மாவட்டத்திற்கான முதலாவது திட்டம், இன்று திங்கட்கிழமை குச்சவெளி கோட்ட கல்வி பிரிவிலுள்ள நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த போசாக்கு அங்குரார்ப்பண நிகழ்வில் உலக உணவுத் திட்ட வதிவிடப்பிரதிநிதி மற்றும் திருமலை அரச அதிபர் காமினி றொட்றிக்கோ ஆகியோர் கலந்து கொள்வர்.

**தமிழர்களின்...**

மனிதாபிமான அபிவிருத்திப் பணிகளும் இடம்பெறவில்லை.தற்போது இடைக்கால திட்டவரைபு ஒன்றை கையளித்து நாங்கள் பேச்சுவார்த்தைக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் சிறிலங்கா அரசு இந்த திட்ட வரைபை பிரித்துக் கூறுகின்றது.

ஆனால் இந்த திட்ட வரைபு சம்மந்தமாக எங்கள் தலைமைப் பீடம் பூரண விளக்கத்தை அளித்துள்ளது. என்றார்.

இச்சந்திப்பில் பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வா, விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கவியாளன் மற்றும் 200க்கும் மேற்பட்ட வர்த்தகர்களும் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 08.11.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.